INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

26 மே 2020

**ஊடக அறிக்கை: இலங்கையின் சிஐடி இனை தலைமைதாங்கும் சித்திரவதையாளர்.**

**ஜொகானஸ்பேர்க்:** பெயர்போன சித்திரவதையாளர் எனச் சொல்லப்படும் ஒருவர் குற்றவியல் விசாரணைப் பிரிவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளமையால் இலங்கை காவல்துறையின் குற்ற விசாரணைப் பிரிவிற்கான சர்வதேச உதவி உடனடியாக மீளாய்வு செய்யப்பட வேண்டும். மூத்த பொலிஸ் அத்தியட்சகர் அடம்பரகே றுவான் பிரசன்ன ஜெயக் டி அல்விஸ் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவினால் வெள்ளிக்கிழமை[1] சிஐடி இன் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக 2019 இல் பதினொரு தமிழர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு உட்பட சித்திரவதை தொடர்பான பல நீதிமன்ற ஆவணங்களிலும் பிரசன்ன டி அல்விஸ் இன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில்[2] அல்விஸ் உட்பட வேறு பல அதிகாரிகளின் விபரங்களைக் கொண்ட 13 பக்க ஆவணக்கோவை ஒன்று சாட்சியமாக சமர்ப்பிக்கப்பட்டது.

*"குறிப்பாக பாராளுமன்ற தேர்தல்கள் வரும் நிலையில் பெரும் கவலையை ஏற்படுத்தும் நடவடிக்கையாக இது உள்ளது"* என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார். " 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து தடுத்து வைக்கப்பட்ட பலரும் பிரசன்ன டி அல்விஸ் தம்மை சித்திரவதை செய்ததாக அல்லது அதில் தொடர்புபட்டிருந்ததாக அவரது பெயரைக் குறிப்பிட்டுள்ளார்கள். பிரசன்ன டி அல்விஸ் கோத்தபாய ராஜபக்சவிற்கு மிகவும் விசுவாசமானவராக இருந்துள்ளார். போர் இடம்பெற்ற காலப் பகுதியில் அல்விஸ் காவல்துறையின் பயங்கரவாத விசாரணைப் பிரிவில் இருந்ததுடன் அவருக்கான கட்டளைகளை கோத்தபாய ராஜபக்சவே நேரடியாக வழங்கினார்".

பிரசன்ன டி அல்விஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் தலைமையகத்தில் இருந்த போது ரிஐடி இனரால் திட்டமிட்ட ரீதியில் நடாத்தப்பட்ட சித்திரவதைகள், சித்திரவதைக்கு எதிரான விசேட பிரதிநிதிகள் மற்றும் 2015 இல் இலங்கை பற்றிய OHCHR இன் விசாரணை அறிக்கை உட்பட பல ஐக்கிய நாடுகளின் நடவடிக்கைகளில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் காலப் பகுதியில் ரிஐடி இனால் பயன்படுத்தப்பட்ட மிருகத்தனமாக சித்திரவதை முறைகள் பற்றியும் அடுத்தடுத்து வந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் வருடாந்த மனித உரிமைகள் பற்றிய அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. 5 நாடுகளில் ரிஐடி இன் சித்திரவதைகளில் இருந்து உயிர்தப்பிய 73 பேரை செவ்விகண்டு அவர்களின் வாக்குமூலங்களை அடிப்படையாக கொண்டு

[1] http://www.dailymirror.lk/breaking_news/CID-MSD-SIU-Directors-among-latest-police-transfers/108-188785
[2] https://itjpsl.com/assets/press/ECF-No.-0066-3-Exhibit-B-to-Sooka-Decl.pdf Page 43.

2019 இல் ITJP ஆனது மோசமான பொலிஸ் அணி என்ற தலைப்பிலான ஒரு விரிவான அறிக்கையை[3] வெளியிட்டது.

இந்த ITJP இன் அறிக்கையானது கட்டளைப் பொறுப்பில் இருந்தவர்கள் உட்பட ரிஜடி இல் இருந்த 58 சித்திரவதையாளர்கள் எனச் சொல்லப்படுபவர்களையும் அடையாளங்காட்டியிருந்தது. 2007 வரையான பிற்பட்ட காலப்பகுதியில் சித்திரவதைக்கு எதிரான ஐ.நாவின் விசேட பிரதிநிதி மான்பிரெட் நோவக் இலங்கைக்கு சென்றிருந்த போது ரிஜடி இல் இருந்த இதே சித்திரவதையாளர்களில் பலரைக் குறிப்பிட்டிருந்தார் அத்துடன் ஒருவர் கூட விசாரணை செய்யப்படவோ அல்லது தண்டிக்கப்படவோ இல்லை. மாறாகப் பலருக்கு அடுத்தடுத்து பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

*“இலங்கையில் தண்டனையிலிருந்து பாதுகாப்பு என்பதற்கு இந்த மனிதர் ஒரு அடையாளமாகும்” என ஜஸ்மின் சூக்கா தெரிவித்தார். சித்திரவதைக்குப் பொறுப்பானவர்கள் பொறுப்புகூறலுக்குட்படுத்துவதை உறுதி செய்யும் கடப்பாடு சர்வதேச சமூகத்திற்கு உண்டு. அதன் சர்வதேச உறுதிப்பாடுகளுக்கு அமைய சித்திரவதையாளர்கள் பொது பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் வடிகட்டப்பட்டு மீளாய்வுக்குட்படுத்தப்படுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு இலங்கைக்கு உண்டு”.*

கலிபோனியாவில் 2019 இல் கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக வழக்கினைப் பதிவு செய்த கனடாப் பிரஜையான றோய் சமதானம் டிசம்பர் 2007 இல் ரிஜடி இனரின் தடுப்பில் இருந்த போது பிரசன்ன டி அல்விஸ் மற்றும் கோத்தபாய ராஜபக்ச ஆகியோருக்கு இடையில் தன்னைப் பற்றி இடம்பெற்ற தொலைபேசி உரையாடலை தான் தற்செயலாக கேட்டதாக நீதிமன்றத்திற்கான தனது சமர்ப்பித்தலில் தெரிவித்திருந்தார். பின்னர் அன்றைய தினம் மாலைவேளையில் ரிஜடி அதிகாரிகளால் மோசமான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் இதன்விளைவாக இடதுகை மணிக்கட்டில் வீக்கம், முழங்காலில் காயம், வயிறு மற்றும் ஆணுறுப்பு பகுதியில் வலியும் அவருக்கு ஏற்பட்டது. அடுத்தநாள் காலையில், முதல்நாள் இரவு என்ன நடந்தது என பிரசன்ன டி அல்விஸ் றோயிடம் கேட்டார். அதன் பின்னர் அடிக்கப்பட்டது பற்றி செஞ்சிலுவைச் சங்கத்திற்கு சொல்லக்கூடாது என எச்சரிக்கை செய்த அவர் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பமிட்டால் மேலும் அடிக்காமல் விடுதலை செய்யப்படுவாய் எனவும் கூறினார். வழக்கிறஞர் ஒருவரை தான் பார்க்க விரும்புவதாக றோய் பிரசன்ன டி அல்விஸிடம் கேட்டார் அதற்கு “நீ வழக்கறிஞரை வைக்க முடியாது இங்கு எவரும் உனக்கு உதவி செய்ய முடியாது” என காவல்துறையினன் பதிலளித்தார். 2016 இல் ரிஜடி இன் காவலில் வைக்கப்பட்டு அவர் சித்திரவதை செய்யப்பட்டமை தொடர்பாக ஐநா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கான ஒரு முறைப்பாட்டில் வெற்றி பெற்றார் அத்துடன் அவருக்கு இலங்கை அரசாங்கம் இழப்பீடு வழங்க வேண்டும் என கட்டளையிடப்பட்டது ஆனால் அதற்கு இலங்கை அரசாங்கம் இணங்க[4] மறுத்துவிட்டது.

வெற்றிவேல் ஜசிகரன் மற்றும் அவரது துணைவியார் வளர்மதி வடிவேலு மற்றும் ஜனாதிபதி ஒபாமாவினால் ஒரு அநீதியானமுறையில் தண்டிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கான[5] அடையாளம் என வர்ணிக்கப்பட்ட ஜெயபிரகாஸ் சிற்றம்பலம் திசாநாயகம் உட்பட பல பத்திரிகையாளர்களினுடைய அடிப்படை உரிமைகள் மனுக்களில் பிரசன்ன டி அல்விஸ் இனுடைய பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதைவிட , 2009 ஆம் ஆண்டு சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியரான லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பான விசாரணையில் அவரது பங்குகுறித்து அல்விஸ் விசாரணை செய்யப்பட்டார். ரிஜடி இன் கொலைக்காக 2010 இல் கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவப் புலனாய்வு அதிகாரியான கந்தகெதர பிரியவன்ச 2016 இல் திறந்த நீதிமன்றத்தில் ஒரு

3 https://itjpsl.com/reports/terrorism-investgation-division
4http://docstore.ohchr.org/SelfServices/FilesHandler.ashx?enc=6QkG1d%2FPPRiCAqhKb7yhsukPtYsnxNH1DBeueuCbK4hkTaGALQTpP6XpwSalkyo%2FLgQxV9qfCNKUejQM1toFhnFL9Pb1%2FLHlv%2BzEoA3ETh7F6N70gpwuCEmo2ItyaC7I0Ow9wfXUd%2FDfXG%2F8ml4sJQ%3D%3D
5 https://www.thetimes.co.uk/article/js-tissainayagam-journalist-lauded-by-obama-is-jailed-in-sri-lanka-5xrbl5z2dg2

வாக்குமூலத்தை அளித்தார். இதில் லசந்தவின் கொலையில் முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவினைச் சிக்க வைப்பதற்காக ஒரு வாக்குமூலம் வழங்ககுமாறு அல்விஸ் தன்னை நிர்பந்திக்க முயற்சி செய்ததுடன் தன்னை அரச சாட்சியாளராக்குவதுடன் தனக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்பு[6] வழங்கப்படும் எனவும் வாக்குறுதி வழங்கியதாக குற்றஞ்சாட்டினார்.

பெப்ரவரி 2017 இல், முன்னாள் ரிஜடி இன் பணிப்பாளரும் , பிரிதி பொலிஸ்மா அதிபருமான நளக டி சில்வா பொலிஸ்மா அதிபரிடம் பிரசன்ன டி அல்விஸ் இற்கு எதிராக ஒரு முறைப்பாட்டை பதிவு செய்தார் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த முறைப்பாடானது மோசடி பற்றியும் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையில் சரத்பொன்சேகாவை சிக்கவைப்பதற்கு அல்விஸ் முயற்சி செய்திருந்தார் எனவும் குற்றஞ்சாட்டியிருந்தது. பின்னர் நளக டி சில்வா கோத்தபாய ராஜபக்ச , அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரசன்ன டி அல்விஸ்[7] ஆகியோரை கொலை செய்வதற்கான சதித்திட்டம் பற்றிய குற்றச்சாட்டில் அவரது பங்கிற்காக கைது செய்யப்பட்டார். பிரசன்ன டி அல்விஸிற்கு எதிரான பொலிஸ்முறைப்பாடு விசாரணை செய்யப்பட்டதா அல்லது அவரது மேலதிகாரியினால் மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் அவரது பெயர் நீக்கப்பட்தா என்பது பற்றி தெளிவாக எதுவும் தெரியவில்லை.

இதனைவிட, ITJP இனால் செவ்வி காணப்பட்ட வேறு பதினொரு[8] சாட்சியாளர்கள் தமது வாக்கு மூலத்தில் பிரசன்ன டி அல்விஸ் பெயரைக் குறிப்பிட்டுள்ளார்கள். காலியிலுள்ள ரிஜடி இன் பூசா தடுப்பு முகாமிலும் கொழும்பிலுள்ள ரிஜடி தலைமையகத்திலும் திட்டமிட்ட வகையில் சித்திரவதை பாவிக்கப்படுவது பற்றி அவருக்கு தெரிந்திருந்தது என அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள். அவர் தனது அலுவலகத்தில் நேரம் கடந்து வேலை செய்யும் போது இரவில் சித்திரவதை செய்யப்படுகையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் போடும் அலறல் சத்தங்களை அல்விஸ் கேட்காமல் இருந்திருக்கவே முடியாது எனத் தெரிவிக்கின்றார்கள். போலியான வாக்குமூலம் வழங்குமாறு அல்விஸ் தன்னை நிர்ப்பந்தித்ததாக தடுத்து வைக்கப்பட்டட ஒருவர் குற்றஞ்சாட்டினார் , அலுவலகத்தில் ஒரு கதிரை இருந்தாலும் கூட அல்விஸின் அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்ட போது எப்பொழுதும் நிலத்தில் முழங்காலில் இருக்கச் செய்யப்பட்டதாக இன்னுமொருவர் விபரிக்கின்றார். அவரது அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்ட கைதிகள் கன்னத்தில் அறையப்பட்டு அச்சுறுத்தப்பட்டதாக அவர் குற்றஞ்சாட்டப்படுகின்றார். பொய் சொல்வது நிறுத்துமாறு கூறிவிட்டு பிரசன்ன டி அல்விஸ் அந்த அறையை விட்டுச் சென்ற அதேவேளையில் அவருக்கு கீழ் இருந்த நான்கு அதிகாரிகள் சத்தம் வெளியில் கேட்காமல் இருப்பதற்காக வானொலிப் பெட்டியின் சத்தத்தை அதிகரித்துவிட்டு தன்னைக் கடுமையாக அடித்ததாக இன்னுமொரு நபர் கூறினார். அல்விஸ் திரும்பி வந்தார் அத்துடன் அவருக்கு கீழ் இருந்த அதிகாரி தன்னை வலி ஏற்படும் நிலையில் விட்ட போது கூட அதில் அவர் தலையிடவேயில்லை என அந்த சாட்சியாளர் கூறுகின்றார்.

கைதிகளை கயிற்றினால் கட்டி தலைகீழாக தொங்கவிடுவதற்கு பயன்படுத்துவதற்கு இரும்பு வளையினையும் சித்திரவதைகளுக்கான உபகரணங்களையும் கொண்ட கொழும்பிலுள்ள ஒரு விசாரணை அறையினை பற்றி ரிஜடி இனால் தடுத்து வைக்கப்பட்டவர்கள் விபரித்தார்கள். நிர்வாணமாக்கப்பட்டு கண்கள் கட்டப்பட்ட நிலையில் கைதிகள் அந்த அறைக்குள் கொண்டு செல்லப்படுவதை தான் பார்த்ததாகவும் அத்துடன் அல்விஸ் சில சமயங்களில் அந்த அறைக்குள் போவதுடன் கைதிகளிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என தனக்கு கீழ் இருந்த அதிகாரிகளைக் குற்றஞ்சாட்டுவார் எனவும் அவர் தெரிவித்தார். எல்லோரும் அல்விசை "கோத்தபாயாவின் ஆள்" என்றே குறிப்பிட்டார்கள் அத்துடன் இதன்விளைவாக அவரை விட மூத்த அதிகாரிகள் அல்விசிற்கு அடங்கியே நடந்து கொண்டார்கள் என தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

*"கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்பு செயலாளராக இருந்த போது ரிஜடி அவரது கட்டுப்பாட்டின் கீழே இருந்தது, இப்பொழுது ஒரே குழுவைச் சேர்ந்தவர்கள் பதவியுயர்த்தப்பட்டு*

---

6 https://www.vikalpa.org/?p=19250
7 https://economynext.com/sri-lanka-police-officer-arrested-over-plot-to-kill-deputy-11952/
8 Ten cited in court documents; W315 interviewed since then.

*வருகின்றமையானது இலங்கையை கையாளும் அனைவருக்கும் கரிசனையை ஏற்படுத்த வேண்டும்''* என சூக்கா தெரிவித்தார். *''சிஜடி அமெரிக்காவின் எந்த உதவிகளையும் பெற்றுக்கொள்ளாத வகையில் லியேகி சட்டங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இலங்கை காவல்துறைக்கு பயிற்சிகளை வழங்கிவரும் யுகே அரசாங்கமும் சிஜடி இனருக்கான எல்லா நிகழ்சித்திட்டங்களையும் நிறுத்த வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இதனைவிட போதைமருந்துகள் மற்றும் குற்றச் செயல்களுக்கு எதிரான ஐ நா அலுவலகம் மற்றும் ஐநா அமைதிகாக்கும் பணி உட்பட ஐக்கிய நாடுகளின் அனைத்துப் பிரிவுகளும் சிஜடி இனருக்கு எதிராக ஒரே மாதிரியான வடிகட்டல் கொள்கையைக் பயன்படுத்த வேண்டும்''.*

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT